## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சேந்தமங்கலம்.

## O.S. No. 65 /2020

## P.W. 1 நாள் – 13.07.2023

2023 ம் ஆண்டு ஜுலை திங்கள் 13 ம் நாள் ராஜன் என்பவரின் வாக்குமூலம் விசாரிக்கப்பட்டு 1983 ம் ஆண்டின் 10 வது சட்ட விதிகளின் ஏற்பாட்டின்படி செல்வி.எஸ்.சங்கீதா, இளநிலை உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜன் | தொழில் | : | |
| த /பெயர் | : | பொன்னுசாமி கவுண்டர் | ஜாதி | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |
| மாவட்டம் | | | | | |

**முதல் விசாரணை தொடர்ச்சி**

நான் தாவாவில் 2 ம் வாதி. 1 ம் வாதி எனது தகப்பனார். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண பிரமாண பத்திரத்தில் கண்டுள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். கீழ்க்கண்ட ஆவணங்களை வாதி தரப்பில் நீ.ம.சா.ஆ.1 முதல் நீ.ம.சா.ஆ.6 வரை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. நீதிமன்ற ஆணையர் இ.ம.எண். 834/2013 என்ற மனுவில், தாவா சொத்தின் இயற்கைஅமைப்பை பார்வையிட்டு தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.1, நீ.ம.சா.ஆ.2 ஆகும்.

2. நீதிமன்ற ஆணையர் இ.ம.எண்.834/2013 என்ற மனுவில், தாவா சொத்தை 22.08.2015 தேதியில் நில அளவையரின் உதவியுடன் அளவீடு செய்து தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.3, நீ.ம.சா.ஆ.4 ஆகும்.

3. இ.ம.எண்.239/2016 என்ற எண்ணில் நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை 18.03.2017 தேதியில் நில அளவையர் உதவியுடன் அளவீடு செய்து தாக்கல் செய்த அளவறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.5 , நீ.ம.சா.ஆ.6 ஆகும்.

நான் தாவாவில் கோரியவாறு தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டுகிறேன்.

(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)